# போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரால் வட இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்: ஒரு வரலாற்றுப் பார்வை

**மங்களரூபி சிவகுமார்***

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் வரலாற்றில் ஐரோப்பியர்களது ஆட்சிக்காலமானது *(1505-1948)* பல்வேறு வழிகளில் திருப்புமுனையாக அமைந்த காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. இக்காலப்பகுதியில் இலங்கையில் இவர்களது நடவடிக்கைகள் அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்திருந்தமையினைச் சான்றுகள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. முதலில் போர்த்துக்கேயர்களும் அவர்களைத் தொடர்ந்துவந்த ஒல்லாந்தர்களும் தங்களது நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளவதற்காகவும் இங்கிருந்து அதிகளவான இலாபத்தினைப் பெற்றுக்கொள்ளுவதற்காகவும் தமக்கேற்றதொரு பொருளாதார ஒழுங்குமுறையினை யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கையின் கரையோரப் பகுதிகள் முழுவதிலும் கைக்கொண்டனர். இவர்களுக்குத் தென்னிலங்கையினைப் போன்று கறுவா வடஇலங்கையில் கிடைக்கவில்லை. இதனால் இவர்கள் இருபகுதியினரும் இப்பகுதிகளில் தமக்கு வருமானத்தினைத் தரக்கூடிய வகையில் ஒருசில பயிர்களை அடையாளங்கண்டு அறிமுகஞ் செய்தும் ஏற்கனவே காணப்பட்ட சில வகையான பயிர்செய்கைகளை ஊக்குவித்தும் தமது பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். பொதுப்படப் பார்த்தால் யாழ்ப்பாணத்தில் பணப்பயிர்களின் வளர்ச்சியில் இவர்கள் அதிகளவான அக்கறையினைச் செலுத்தியிருந்தமையினை அவதானிக்க முடிந்தது. தமது நாடுகளின் நலனையே பிரதான இலக்காகக்கொண்டிருந்த இவர்களது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் இலங்கையின் வடபகுதியில் காணப்பட்ட பொருளாதாரத்தினை எவ்வகையிலும் சுரண்டுவதனையே அடிப்படையான நோக்கமாகக் கொண்டிருந்தது. வடஇலங்கை மக்களின் சுயதேவை நோக்கிய பொருளாதாரத்தில் மாற்றங்கள் பலவும் இப்பின்னணியில் ஏற்பட ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஐரோப்பியர்கள் இருவரும் நாட்டினைவிட்டுச் சென்றதன் பின்னர் தொடர்ந்துவந்த ஆங்கிலேயர்களது காலத்தில் இலங்கையின் பிற பகுதிகளில் பொருளாதார மாற்றங்கள் பாரிய அளவில் ஏற்பட்டிருந்தாலும்கூட வடஇலங்கையில் அத்தகைய மாற்றங்களை அவர்களால் ஏற்படுத்த முடியவில்லை. தற்காலம் வரை ஆங்கிலேயர்களது வருகைக்கு முற்பட்டகால ஐரோப்பியர்கள் இருவர்களதும் நடவடிக்கைகள் வடஇலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் பல நீடித்து நிலைத்து இருப்பதனை அவதானிக்க முடிகின்றதெனலாம். இவ்வகைப் போர்த்துக்கேயர்கள் மற்றும் ஒல்லாந்தர்களது காலங்களில் அவர்கள் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய மாற்றங்களைக் கண்டறிய இவ்வாய்வு முயற்சிக்கின்றது. வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்துள்ள இவ்வாய்வில் முதற்தர மற்றும் இராண்டாந்தரத் தரவுகள் ஆய்வின் தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதற்தர ஆதாரங்கள் வரிசையில் சமகாலத்தில் இவ்விடயங்கள் பற்றி எழுதப்பட்ட நூல்கள், குறிப்புக்கள், அறிக்கைகள், அரசாங்க ஆவணங்கள் என்பனவும் இரண்டாந்தர ஆதாரங்கள் வரிசையில் முதற்தர ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு பிற்பட்ட காலங்களில் தோன்றிய நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்**: சுயதேவைப் பொருளாதாரம், பணப்பயிர்கள், பொருளாதாரச் சுரண்டல்கள், வேலைவாய்ப்புக்கள்

To whom correspondence should be addressed: mangalarubysivakumar@yahoo.com

*Department of History, University of Jaffna.